## முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.1337/2019 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 10-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவீன் | வட்டம் | : | |
| த/பெ. | : | சண்முகசுந்தரம் | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | பெரியசடையம்பாளையம் | வயது | : | |

**வா.சா. 2 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 3-ம் நபர் ஆவேன். எதற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளீர்கள் என்றால், ஜெயபிரகாஷ், சின்னசாமி வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி, பிரதிவாதிகளை எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஜெயபிரகாஷ் மற்றும் சின்னசாமி ஆகியோர் இடத்தை கிரையம் செய்வதற்காக முடிவு செய்து, சாட்சி கையொப்பம் செய்வதற்காக ஜெயபிரகாஷ் 25.07.2017-ம் தேதி அழைத்து சென்றார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தவுடன் வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றீர்களா என்றால், சென்றேன். சாட்சியம் அளிப்பது குறித்து உங்களுக்கு சொல்லி கொடுத்தார்களா என்றால், நான் நேரடியாக சாட்சி கையொப்பம் செய்ய போனவகையில் எனக்கு விபரம் தெரியும், சொல்லியும் கொடுத்தார்கள். எனக்கு பிரதிவாதியை நேரடியாக தெரியாது என்றாலும், வாதி சொல்லி கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. ஜெயபிரகாஷ் போட்ட வழக்கில் ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரிதான். 25.07.2017-ம் தேதியில் நீங்கள் கையொப்பம் செய்ய போகவில்லை என்றாலும், முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் தவறானது என்று சொன்னாலும், சரியல்ல. உங்களது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டிய சாட்சியம் என்று சொன்னால், சரியல்ல.